தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு,
ஏப்ரல் 3, 2022

# மதம் - அன்பானவர்களுக்கா அல்லது கொடியவர்களுக்கா?

எல்லாவற்றிற்கும் மேலாக நமது இதயங்கள் பொதுநலனில் அக்கறை கொண்டு செயல்பட்டால், இப்புவியில் உள்ள எதையுமே நாம் புறம்தள்ள முற்படமாட்டோம். பிற உயிரினங்கள்மேல் நாம் காட்டும் வெறுப்பு, சில இறுதியில் மனித இனத்தின் வெறுப்பிலும், துன்புறுத்துவதிலும் சென்று அடையும் என்பது நிச்சயம். நம்மிடம் ஓர் இதயம் மட்டுமே உள்ளது. ஆகவே, பிற விலங்குகளைத் துஷ்பிரயோகம் செய்யும் அதே இதயம், மனித உறவுகளையும் துஷ்பிரயோகம் செய்ய தயங்கவே தயங்காது.

“பிற உயிரினங்களை வதைக்கும் ஒவ்வோரு செயலும் மனிதனுடைய மாண்புக்கும், மரியாதைக்கும் எதிராகச் செய்யப்படும் செயல்” என்று கத்தோலிக்கத் திருச்சபை மறைக்கல்விப் போதனைகள், 2418 ஆம் எண்ணிலிருந்து வாசித்து அறிகிறோம். இப்பிரபஞ்சத்தில் காணப்படும் அனைத்து நிலைகளிலும் நமது அன்பைக் காட்டாமல் ஒருசிலவற்றை மறந்துவிடும் போது, நாம் பொய்யர்களாக ஆக்கப்படுகிறோம்.

இதைப்பற்றி எழுதுவகையில் தோமினிக்கன் நாட்டு ஆயர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்: “சமாதானம், நீதி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு... இம்மூன்றுமே ஒன்றோடோன்று நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தனித்தனியாகப் பிரித்தெடுத்து, தனித்தனியாகப் பார்க்கும் முயற்சிகள் மீண்டும் நம்மைப் படுப்பாதாளத்தில் தள்ளிவிடும் என்பது நிச்சயம்.

இப்பிரபஞ்சம் உறவுகள் மேல் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதில் மனித இனம் சகோதரி, சகோதரனாக, பிற உயிரினங்களுடன் ஓர் ஆன்மிகத் திருப்பயணம் செய்து கொண்டுள்ளது. இறை அன்பினால் உருவாக்கப்பட்ட பிற உயிரினங்களோடு, மனித இனம், அன்பின் மூலம் இணைக்கப்பட்டு ‘ சகோதரன் சூரியன்,

சகோதரி நிலவே, சகோதரன் நதியே சகோதரி புவியே' என்று அழைக்கும் உரிமையை உறவாகப் பெற்றுள்ளான்.

*லாடாதோ சி #92*

*நாம் சில மணித்துளிகள் நமது மத நம்பிக்கையை சிறப்பாக நமது கத்தோலிக்க விசுவாசத்தை பற்றி சிந்திப்போம். நாம் நமது கத்தோலிக்க விசுவாசத்தை பற்றி சிந்திக்கும்போது பெரும்பாலான நேரங்களில் நம் பார்வை மறைக்கப்பட்ட நமது மதத்தின் நிறுவனத்தன்மையே நமது மனதில் எழும்புகின்றன. ஒரு கிறிஸ்தவர் என்பதற்கு அடையாளம் அவர் இறைவனை நம்பி ஏற்க வேண்டும். இது அன்பில் கட்டப்பட்ட ஒரு வாழ்வின் வழி. இங்குதான் நாம் இறைவனின் குழந்தையாக தழைத்து வளர்கிறோம்.*

## நற்செய்தி – யோவான் 8:1-11
## "உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண்மேல் கல் எறியட்டும்"

இயேசு ஒலிவ மலைக்குச் சென்றார். பொழுது விடிந்ததும் அவர் மீண்டும் கோவிலுக்கு வந்தார். அப்போது மக்கள் அனைவரும் அவரிடம் வந்தனர். அவரும் அங்கு அமர்ந்து அவர்களுக்குக் கற்பித்தார். மறைநூல் அறிஞரும் பரிசேயரும் விபசாரத்தில் பிடிபட்ட ஒரு பெண்ணைக் கூட்டிக் கொண்டு வந்து நடுவில் நிறுத்தி, "போதகரே, இப்பெண் விபச்சாரத்தில் கையும் மெய்யுமாகப் பிடிப்பட்டவள். இப்படிப்பட்டவர்களைக் கல்லால் எறிந்து கொல்ல

வேண்டும் என்பது மோசே நமக்குக் கொடுத்த திருச்சட்டத்திலுள்ள கட்டளை. நீர் என்ன சொல்கிறீர்?" என்று கேட்டனர். அவர்மேல் குற்றம் சுமத்த ஏதாவது வேண்டும் என்பதற்காக அவர்கள் இவ்வாறு கேட்டுச் சோதித்தார்கள். இயேசு குனிந்து விரலால் தரையில் எழுதிக்கொண்டிருந்தார். ஆனால், அவர்கள் அவரை விடாமல் கேட்டுக்கொண்டிருந்ததால், அவர் நிமிர்ந்து பார்த்து, "உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண்மேல் கல் எறியட்டும்" என்று அவர்களிடம் கூறினார். மீண்டும் குனிந்து தரையில் எழுதிக் கொண்டிருந்தார்.
அவர் சொன்னதைக் கேட்டதும் முதியோர் தொடங்கி ஒருவர் பின் ஒருவராக அவர்கள் யாவரும் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். இறுதியாக இயேசு மட்டுமே அங்கு இருந்தார். அப்பெண்ணும் அங்கேயே நின்று கொண்டிருந்தார். இயேசு நிமிர்ந்து பார்த்து, "அம்மா, அவர்கள் எங்கே? நீர் குற்றவாளி என்று எவரும் தீர்ப்பிடவில்லையா?" என்று கேட்டார். அவர், "இல்லை, ஐயா" என்றார். இயேசு அவரிடம் "நானும் தீர்ப்பு அளிக்கவில்லை. நீர் போகலாம். இனிப் பாவம் செய்யாதீர்" என்றார்.

## சிந்தனைக்கு

விவிலியத்தில் மிகவும் அழகான வரிகள் உள்ளன. அவ்வகையில் 1 யோவான் 4:7-8இல் இப்படியாக எழுதப்பட்டிருக்கின்றது. 'அன்பார்ந்தவர்களே, ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துவோமாக! ஏனெனில், அன்பு கடவுளிடமிருந்து வருகிறது. அன்பு செலுத்தும் அனைவரும் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள். அவர்கள் கடவுளை அறிந்துள்ளார்கள். 8அன்பில்லாதோர் கடவுளை அறிந்து கொள்ளவில்லை; ஏனெனில், கடவுள் அன்பாய் இருக்கிறார்.' அன்னை தெரேசாபோல, நாம் பெரிய காரியங்களைச் செய்ய

வேண்டிய அவசியம் இல்லை. சிறிய காரியங்களை அன்போடு செய்யுங்கள்' என்கிறார்.

மதத் தலைவர்கள் கடவுளின் சட்டம், அதன் அர்த்தம், நோக்கம் குறித்து அதிகம் கவலைப்படுவதில்லை. "இந்தப் பெண்ணுக்குத் தாங்கள் செய்யும் காரியம் அன்பான காரியமா? என்று யோசிக்கத் தோன்றவில்லை. இயேசுவை எதிர்க்கும் வண்ணம் அவர்களை அந்தப் பெண்ணைக் கல்லெறிந்து தாக்கவும் கொல்லவும் முற்படுகின்றனர்.

இந்த வாரம், இயேசுவை ஏற்றுக்கொண்டவராக வாழ்வது என்றால் என்ன என்று நம்மை நாமே கேட்டுக்கொள்வோம். அதோடு மற்றவர்களுடனான நமது உறவுகளில் நம்மிடம் இருக்க வேண்டிய சில நல்ல மனப்பான்மைகள் பற்றிக் கருத்தில் கொள்வோம்.

## தவக்கால முயற்சி

இவ்வாரத்தில் நம்மிடம் இருக்கக்கூடிய கொடுமையான மனப்பான்மையைப் பற்றிச் சற்றுச் சிந்திப்போம். ஒருசில நேரங்களில் 'நான் உன்னைவிடச் சிறந்தவன் என்ற மனப்பான்மை நம் சிந்தனைக்கு வரும். நாம் இயேசுவைப் பின்பற்றுவதன் நோக்கம் அதுதானா? இவ்வாரம் நாம் நம்மையே கேட்க வேண்டிய முக்கியக் கேள்வி 'நமது விசுவாசத்தையும் நம்பிக்கையையும் மற்றவர்களைத் தாக்கும் ஆயுதமாக நாம் எப்பொழுதாவது பயன்படுத்தியுள்ளோமா? அல்லது நாம் செய்கின்ற செபம், மற்றவர்களை அவமதிக்கக்கூடிய ஆயுதமாக

இருந்துள்ளதா? யாராவது தேவாலயத்திற்கு வராமல் இருந்திருந்தால், அதேயே நாம் அடிக்கடிச் சுட்டிக் காட்டியுள்ளோமா? அல்லது மற்றவர்களைப் பழிவாங்கும் நோக்கில் நாம் செபம் செய்துள்ளோமா? சிந்திப்போம்.

## என் நிலைபாடு

- மற்றவர்களை அவமானப்படுத்தவும், அவர்களைப் பயமுறுத்தவும், குற்றவாளியாகவும் கடவுளையும் என் நம்பிக்கையையும் பயன்படுத்துவதை நிறுத்துவேன்.
- அன்பும் இரக்கமும் கொண்ட பிள்ளையாக, கடவுளின் சாட்சியாக இருப்பேன்.
- மிருகங்களைக் கொடுமைப்படுத்த மாட்டேன்.

## உறுதியான நடவடிக்கை

யாருக்காக (நாம்/நான்) பிரார்த்தனை செய்கிறோம்? நம் பெற்றோர்கள், அன்புக்குரியவர்கள், நாடு, இறந்தவர்கள், நோயாளிகள், துன்பப்படுபவர்கள், புலம்பெயர்ந்தோர், நமது தலைவர்கள் மற்றும் உலகத்திற்காக நாம் பிரார்த்தனை செய்கிறோமா? கடவுள் அவர்களை இறை அன்பில் அரவணைக்க வேண்டும். அவர்கள் மட்டுமே நம் விமர்சனங்களுக்குத் தகுதியானவர்களா? சிந்திப்போம்.